2023 ஏப்ரல் 12] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதிகாரிகளோடு பேசினேன். சம்பந்தப்பட்டவரை உடனடியாகக் கைது செய்து, அது தொடர்பான செய்தியை எனக்குத் தந்தார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனித குலத்திற்கே ஓர் அவமானச் சின்னம் எனக் கருதுகிறோம். அந்த வகையில், இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் எவராக இருந்தாலும், அவர்கள்மீது எந்தவித பாரபட்சமுமின்றி, கடுமையான நடவடிக்கையை துரிதமாக எடுத்திடுவோம் என்பதை இந்த அவையில் நான் உறுதியோடு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) பொள்ளாச்சி, மேற்குப்புறமாக புறவழிச் சாலை அமைக்கும் பணிகள், விரைந்து முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். இதை எடுத்ததற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதை எடுத்து முடித்ததற்குப் பிறகு உங்களுக்குப் பதில் வரும். (குறுக்கீடுகள்) நான்தான் பதில் சொல்கிறேன் என்கிறேன், உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி ஒரு முக்கியமான பிரதான வணிக நகரம். ஏற்கெனவே அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகம். கேரள மாநிலத்திலிருந்து கொச்சின் வழியாக பொள்ளாச்சி நகருக்கு வரும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இப்போது விரிவாக பேச முயல வேண்டாம். நிகழ்ச்சி நிரலில் இருப்பதை மட்டும் வாசியுங்கள். பிறகு உங்களுக்கு இரண்டு கேள்விகளுக்கு வாய்ப்புள்ளன.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் மேற்கு புறவழிச் சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொள்ளாச்சி நகருக்கு மேற்கு புறமாக அமைந்திருக்கின்ற பிரதான புறவழிச் சாலைக்கு மூன்றாண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் காலத்திலே பணிகள் தொடங்கப்பட்டு இடையிலே நடைபெறாமல் தேங்கி நிற்கிறது. துரிதமாக அந்தப் பணியை நடத்தி, இடையிலே அமைந்திருக்கின்ற ஓர் இரயில்வே மேம்பாலம் ஏழரை கிலோ மீட்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். (குறுக்கீடு) உங்களுக்கு இன்னும் இரண்டு கேள்விகளுக்கு வாய்ப்புத் தருவேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து பொள்ளாச்சி வழியாக கோவை செல்லும் அனைத்து வாகன போக்குவரத்துகள் பொள்ளாச்சி நகரின் வழியாகச் செல்வதால் மிகுந்த வாகன நெரிசல் மற்றும் போக்குவரத்துத் தடைகள் ஏற்படுத்தி விடுகின்றன. இதனைத் தவிர்க்கும்பொருட்டு நகருக்கு மேற்குப் புறமாகப் புறவழிச் சாலை அமைக்க நிர்வாக அங்கீகாரம் ரூ.45.84 கோடிக்கு 8–11–2018 அன்று அரசினால் வழங்கப்பட்டது.

இப்புறவழிச் சாலையானது அவினாசி-திருப்பூர்-பல்லடம்–பொள்ளாச்சி-கொச்சின் சாலை (மா.நெ.19)-ல் கி.மீ. 81/0–ல் துவங்கி நல்லூர், தாளக்கரை மற்றும் ஆர். பொன்னாபுரம் வழியாக தே.நெ. எண் 83–ல் கி.மீ. 26/6 ஆச்சிப்பட்டியில் முடிவடைகிறது. சாலையின் மொத்த நீளம் 8.873 கிலோ மீட்டர், அகலம் 10 மீட்டர் ஆகும். இச்சாலைக்கு 16 மீட்டர் அகலத்திற்கு நில ஆர்ஜிதம்

2023 ஏப்ரல் 12] [திரு. எ.வ. வேலு]

மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணி 23–12–2020 அன்று துவங்கப்பட்டது. தற்போது வரை 33% பணிகள் முடிவடைந்துள்ளன.

இச்சாலையை அமைக்க ஜமீன் ஊத்துக்குளி, முத்தூர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் ஆகிய 5 கிராமங்களில் நில ஆர்ஜிதப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. இவற்றுள் முத்தூர், ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் ஆகிய மூன்று கிராமங்களுக்கான பத்திரப் பதிவு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதற்கிடையே நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரிய இழப்பீடுகளுக்கும் மற்றும் சாலையின் இரு புறங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள குடிநீர் குழாய்கள் இட மாற்றம் செய்யும் பணிகளுக்கும் தேவையான கூடுதல் நிதி ரூ.73.35 கோடி ஒதுக்கீடு செய்து திருத்திய நிர்வாக ஒப்புதல் 11–11–2022 அன்று அரசால் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நில ஆர்ஜிதப் பணிகள் தனி மாவட்ட வருவாய் அலுவலர், கோவை அவர்களால் துரிதமாக நடைபெற்று வருகின்றன மற்றும் குடிநீர் குழாய்கள் இட மாற்றம் செய்யும் பணிகளும் துவங்கப்பட்டுவிட்டன.

நில ஆர்ஜிதப் பணிகள் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் சாலைப் பணிகள் அக்டோபர் 2023–ல் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

இப்புறவழிச் சாலையில் கி.மீ. 7/10–ல் 7 மீ. அகலத்துடன்கூடிய இரயில்வே மேம்பாலம் அமைந்துள்ளது. இதை விரிவாக்கம் செய்ய சாலைப் பணிகள் முடிக்கப்பட்ட உடன் போக்குவரத்து செறிவு கணக்கீடு செய்து, அதன் அடிப்படையில் இரயில்வே மேம்பாலப் பணி இரயில்வே துறையினருடன் ஆலோசித்து பணப் பகிர்வுடன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து இரயில்வே மேம்பாலம் விரிவாக்கம் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை சுமார் 9 கி.மீ. நீளம் கொண்டது. கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின்

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 12

துறைமுகம், பாலக்காடு போன்றவற்றுக்குச் செல்ல விரும்புவோர், கோவை வடக்குப் பகுதியில் இருப்பவர்கள் அந்தச் சாலையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இந்தச் சாலை வழியாக, ஜமீன் ஊத்துக்குளி, நல்லூர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம், ஆச்சிப்பட்டி ஆகிய ஐந்து கிராமங்களைச் சார்ந்த விவசாயிகளின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்தச் சாலை அமைவதன்மூலம் பொள்ளாச்சி நகருக்குள் நெரிசல் குறையும். இந்தச் சாலைக்கு இடையில் ஏழு மீட்டர் அகலத்தில் ஓர் இரயில்வே மேம்பாலம் உள்ளது. இந்த இரயில்வே மேம்பாலத்தை 10 மீட்டராக அகலப்படுத்தும் பணியும் இத்துடன் சேர்த்து செய்து தரப்பட வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்புறவழிச் சாலைப் பணிக்காக 45.84 கோடி ரூபாய் நவம்பர் 2018-ல் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புறவழிச் சாலையானது பல்லடம்-பொள்ளாச்சி-கொச்சின் சாலை SH-19 கி.மீ. 81/0-ல் துவங்கி ஜமீன் ஊத்துக்குளி, முத்தூர், தாளக்கரை, ஆர். பொன்னாபுரம் மற்றும் சங்கம்பாளையம் வழியாக NH-83-ல் ஆச்சிப்பட்டியில் முடிவடைகிறது. இந்தப் புறவழிச்சாலை 8.8 கி.மீ. நீளம். மொத்தம் 10 மீட்டர் அகலத்திற்கு சாலை அமைப்பதற்காக 23-12-2020-ல் இந்தப் பணி துவக்கப்பட்டது. தற்போது அதனுடைய பணிகள் 33 சதவிகிதம்தான் முடிவடைந்திருக்கின்றன. நில எடுப்பு மற்றும் குடிநீர் குழாய்கள் மாற்றியமைக்க, திருத்திய ஒப்புதல் தேவைப்பட்டது. அந்த அடிப்படையிலே, ரூ.73.35 கோடிக்கு, நவம்பர் மாதம் 2022-ல் தான் பெறப்பட்டது.

முற்பகல் 11-20

ஏற்கெனவே நில எடுப்புப் பணிக்காகக் கொடுக்கப்பட்ட அந்தத் தொகை போதாத காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்பேற்றதும், அதை செய்து முடிக்க வேண்டுமென்ற அடிப்படையில், 2022-ல் 73.35 கோடி ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு Revised Administrative Sanction ஆன பின்பு, இப்போது ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் அந்த நிலங்கள் முழுமையாக எடுக்கப்பட்டு, நில எடுப்பு முடிந்தவுடனேயே, அக்டோபர் மாதம் 2023-க்குள் அந்த மேற்கு சாலை போடப்படும்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இப்போது பொள்ளாச்சி–கோவை பிரதான சாலை ஆசியாவிலேயே மிகப் பெரிய* concrete *சாலையாக, சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சி–திருப்பூர் நான்கு வழிச்சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்றும் பணி, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் காலத்திலிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பயன்தரத்தக்க வகையிலே, வெள்ளளூர், செட்டிபாளையம், மயிலேரிபாளையம், அரசம்பாளையம், கொண்டம்பட்டி, கோதவாடி, கோடங்கிபாளையம், நல்லெட்டிப்பாளையம், முள்ளுப்பாடி, காணியளயம்பாளையம், மேட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி, 10 மீட்டர் அகலம் கொண்ட பாதை ஒன்று அமைய வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்டகாலக் கனவு, இதற்காக எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, சுருக்கமாகப் பேசுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நிதியை ஒதுக்கி, அரசாணையை வெளியிட்டு, ஒப்பந்தம், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கம், சுருக்கமாகக் கேள்வியை முடியுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நிதியை ஒதுக்கி, அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு, தேர்தல் வந்துவிட்டதால், பணி நின்றுவிட்டது. இதில் ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், பொள்ளாச்சி–கோவை மாற்றுப்பாதை என்று அதற்கு யாரோ பெயர் வைத்துவிட்டார்கள். இது பொள்ளாச்சி–கோவைக்கு மாற்றுப்பாதை அல்ல. இடையிலே விவசாய நிலங்களுக்கான இணைப்புப்பாதை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பணியைத் தொடங்கி, விவசாயிகளுடைய வாழ்வில் ஒளியேற்றி வைப்பதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்ய*

வேண்டும். அதாவது கிட்டத்தட்ட 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறக்கூடிய சாலை, இதை ஏழரை மீட்டராக அமைக்காமல், அந்த வழியாக நிறைய coir industries, தென்னை நார் தொழிற்சாலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உங்கள் கேள்வியைப் புரிந்து கொண்டோம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: அந்த வழியில் agro based industries, தென்னை நார் தொழில்கள், பித்துக்கட்டி உருவாக்குவது போன்ற நிறைய தொழிற்சாலைகள் மற்றும் கோழிப்பண்ணைகள் இருக்கின்றன. அங்கே உற்பத்தி செய்கின்ற பொருட்கள் துறைமுகங்களுக்கு செல்கின்ற அளவிலே,— இப்போது மூன்று மீட்டர் சாலைதான் இருக்கிறது. எனவே, அந்த ஏழரை மீட்டர் சாலை என்பதை பத்து மீட்டராக மாற்றி, சாலைப் பணிகளை இந்த ஆண்டோ அல்லது வரும் ஆண்டோ முடித்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் குறிப்பிட்ட சாலை என்பது, 2018-ல் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 4 கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கு நிலங்களை எடுப்பதற்காக ஓர் ஒப்புதல் வழங்கப்பட்டது. நிலங்கள் எடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உடனேயே நிலங்களை எடுக்கவில்லை. 2019-ல் 65.89 கோடி ரூபாய்க்கு சாலைகள் போடவேண்டுமென்று, அப்போது ஒப்பந்தம் கோரப்பட்டது; ஆனால், நிலமே எடுக்கவில்லை. அதற்குப் பின்னால் 2020-ல் 23.68 கோடி ரூபாய்க்கு மீண்டும் நிலம் எடுப்பதற்காக திருத்திய மதிப்பீடு அரசின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது. அது வழங்கிய பின்பும் நிலம் எடுக்கவில்லை. அவர் குறிப்பிட்டதுபோல, பொள்ளாச்சிக்கும் கோயம்புத்தூருக்கும் இடையில் ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை 81-ல் NHAI மூலமாக நான்குவழிச் சாலையை concrete சாலையாக அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அந்தச் சாலையைச் செப்பனிட்டுக்கொண்டு இருக்கின்றபோதுதான், அவர் குறிப்பிடுகிற சாலையை, மாற்றுச்

2023 ஏப்ரல் 12] [திரு. எ.வ. வேலு]

சாலையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சாலை என்பது ஒருவழிச் சாலை இல்லை. அதை மாநில நெடுஞ்சாலை என்றும் சொல்ல முடியாது. அது எப்படியிருக்கின்றது என்று சொன்னால், அந்தச் சாலையில் 800 மீட்டர் மட்டும்தான் மாநில நெடுஞ்சாலை; 8.20 கிலோ மீட்டர் இதர மாவட்ட சாலை; ஊராட்சி ஒன்றியச் சாலை 10.10 கிலோ மீட்டர்; அப்படி கிராமச் சாலையாகவும் இல்லாமல், ஊராட்சி சாலையாகவும் இல்லாமல், ஒன்றியச் சாலையாகவும் இல்லாமல் புதிய சாலையாக 4.50 கி.மீ. இருக்கிறது. அந்தச் சாலையைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர் சொன்னமாதிரி 11 கிராமங்கள் வழியாகச் செல்வது என்பது உண்மை. இப்படிப்பட்ட நிலையிலே NHAI மூலமாக விரிவுபடுத்தப்பட்ட சாலையில் இப்போது அதில் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டார்கள். எனவே, அந்தச் சாலையில் முழுமையாகப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–25

எந்தச் சாலையைப் போட வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்தச் சாலை குறித்து இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். ஏற்கெனவே பலமுறை கேட்டுக்கொண்டதற்கிணங்க, துறையின் சார்பாக அரசுச் செயலாளரை அழைத்து நான் பேசுகிறபோது, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், போக்குவரத்து சம்பந்தப்பட்ட ஒரு குழுவை அழைத்து, அந்தச் சாலையை அமைப்பதா, இல்லையா என்று கேட்கிறபொழுது, இல்லை, இல்லை, தற்போது IRC விதிகளின்படி போக்குவரத்துச் செறிவு குறைந்துவிட்டது; ஆகவே, 10 மீட்டர் சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை; ஏற்கெனவே இருக்கிற NHAI சாலையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; ஆகவே, இப்பணியை இரத்து செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே ஒரு குறிப்பினை எழுதி துறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் பேரவையின் முன்னாள் துணைத் தலைவராக இருந்தவர். தற்பொழுது பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடர்ந்து மீண்டும், மீண்டும் இந்தச் சாலை விவசாயிகளுக்குப் பயன்படும், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் என்று குறிப்பிட்டதன் அடிப்படையில், இந்த அரசாங்கம் அதற்கு வேண்டிய முன்னெடுப்புகளையெடுத்து, கணக்கெடுத்துப்

பார்க்கிறபொழுது, போக்குவரத்து செறிவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 23 கிலோ மீட்டர் சாலையை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலமாக எந்தளவுக்கு அகலப்படுத்த முடியுமோ அந்தளவுக்குக் கட்டாயம் அகலப்படுத்தி, செப்பனிடப்படும் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையைச் சொல்லும்பொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாக Screen-ல் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதனை cut பண்ணிவிட்டார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நிச்சயமாக 100 சதவிகிதம் அதனை cut செய்யவில்லை. இன்றுதான் Digital House முதன்முதலாக முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படும் நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கேள்வியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் பேசும்போது முழுமையாக உங்களுடைய படம் அதில் தெரிந்தது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Screen-ல் தெரிந்தது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது தெரியவில்லை என்று சொன்னால், அதனை நான் சரிசெய்யச் சொல்கிறேன். (குறுக்கீடு) Screen-ல் தெரிந்தது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அடுத்த நிகழ்வு முடியட்டும்.

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) களியக்காவிளை, அங்கன்வாடி மையம், இடம் மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்